வெ
செ.எண் : 713

# செய்தி வெளியீடு

காவேரி நதிநீரில் தமிழ்நாட்டிற்கு உரிய நீரை கர்நாடகம் திறந்துவிடக் கோரியும், நடப்பாண்டில் சம்பா சாகுபடிக்கு தேவையான நீரை இடர்ப்பாடு பங்கீட்டுக் கொள்கையின்படி தமிழ்நாட்டிற்கு கர்நாடகம் திறந்துவிடக் கோரியும், தமிழ்நாடு அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 26.11.2012 அன்று உச்ச நீதிமன்றம் முன்பு விசாரணைக்கு வந்தபோது, இரு மாநில விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சனை குறித்து இரு மாநில முதலமைச்சர்கள் சந்தித்து ஒரு தீர்வு காண வேண்டும் என்ற ஆலோசனையைத் தெரிவித்து வழக்கு விசாரணையை 30.11.2012 தேதிக்கு உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்தது.

உச்ச நீதிமன்ற ஆலோசனையின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 29.11.2012 அன்று பெங்களூருவில் கர்நாடக முதலமைச்சரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

*******

வெளியீடு: செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 27.11.2012